# அரியலூர் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td></td><td></td><td>அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 20.03.2020 தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அதுதொடர்பாக கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.</td><td></td></tr>
<tr><td>20.03.20</td><td>261</td><td><u>பொருள் எண்.01</u><br>இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் (சைக்கிள் ஸ்டாண்ட்) நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 20.03.2020ல் ஒப்பந்தப்புள்ளி பெறுதல் ஏலம் நடைபெற்றது. அப்போது கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டவர் விபரம்
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலதாரர் பெயர் (ம) முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக்கேள்வி</th></tr>
<tr><td>1</td><td>ஆர்.சுந்தர்,<br>த/பெ.ராமாமிர்தம்,<br>21டி2 விளாங்காரத்தெரு, அரியலூர்.</td><td>ஒப்பந்தப்புள்ளி பெறவில்லை</td><td>ரூ.3,43,800/–</td></tr>
<tr><td>2</td><td>கா.மணிவண்ணன்,<br>85ஏ முனியப்பர் தெரு, அரியலூர்</td><td>ஒப்பந்தப்புள்ளி பெறவில்லை</td><td>ரூ.3,43,300/–</td></tr>
<tr><td>3</td><td>ரா.முத்துகுமார்,<br>த/பெ.ராஜமாணிக்கம்,<br>19A முனியப்பர் தெரு,அரியலூர்.</td><td>ஒப்பந்தப்புள்ளி பெறவில்லை</td><td>ரூ.3,42,500/–</td></tr>
</table>
மேற்கண்டுள்ள மூன்று ஏலதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. ஏலக்கேள்வி மூன்று ஏலதாரர்களில் 1வது எலதாரராகிய ஆர்.சுந்தர் உயர்ந்த பட்ச ஏல கேள்வியாக ரூ.3,43,800/– கேட்டுள்ளார். இந்தக்கேள்வித்தொகை கடந்த ஆண்டு ஏலத்தொகையைக்காட்டிலும், கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரித்தொகையைக் காட்டிலும் கூடுதாலக உள்ளது. எனவே, திரு.ஆர்.சுந்தர் கேட்டுள்ள கேள்வித்தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 20.03.20 | 262 | **<u>பொருள் எண்.02</u>**<br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான மூன்று நீர்த்தேக்க தொட்டிகளை கொண்டு பொது மக்களுக்கு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் இயக்கப்படும் வால்வுகள் 10 வருடங்களுக்கு முன் மாற்றப்பட்டது. மேற்படி, வால்வுகள் தினசரி இயக்கப்படுவதால் தேய்ந்து வால்வுகள் இயக்கப்படுவதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும், குடிநீர் விநியோகிக்கும் நேரம் தவிர மீதமுள்ள நேரங்களிலும் குடிநீர் கசிவு ஏற்படுகிறது. இதனால் குடிநீர் விநியோகிக்கும் சமயம் பொது மக்களுக்கு குடிநீர் குறைவாக விநியோகிக்கப்படுகிறது. எனவே, பொது மக்கள் நலன்கருதி மேற்கண்ட மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலுள்ள 2 எண்கள் 80மிமீ வால்வு, 1 எண் 200மிமீ வால்வு மற்றும் 3 எண்கள் 250மிமீ வால்வு மாற்ற உண்டான மதிப்பீடு ரூ.1,40,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | **<u>அனுமதிக்கப்பட்டது</u>** |
| 20.03.20 | 263 | **<u>பொருள் எண்.03</u>**<br>அரியலூர் நகராட்சி வார்டு எண்.5, 6 மற்றும் 11க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மிகவும் பழுதடைந்து, பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் அத்தியாவசிய தேவையாதாலால் அதன் அவசர அவசியம் கருதி உடன் குடிநீர் பகிரிமான குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம். | **<u>அனுமதிக்கப்பட்டது</u>** |
| 20.03.20 | 264 | **<u>பொருள் எண்.04</u>**<br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 இரயில்வே ஸ்டேசன் அருகில் நவீன எரிவாயு தகன மேடை இடைவெளி நிரப்பும் திட்டத்திம் 2017–18ன் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்காள்ளப்பட்டு தற்போது முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு தயார்நிலையில் உள்ளது. மேற்படி, இடத்திற்கு அணுகு சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட ரூ.7.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியில் மேற்கொள்ளலாம். | **<u>அனுமதிக்கப்பட்டது</u>** |

<table>
<tr>
<td>20.03.20</td>
<td>265</td>
<td>
<u>பொருள் எண்.05</u><br>
அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெட் ராடிங் வாகனத்தின் (TN 61Q 3007) கம்பிரசர் மற்றும் ஜெட் எஞ்சின் போன்ற பகுதிகள் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள 12.03.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>Whale Enterprise Private Limited, Coimbatore</th><th>Pneumatic Controls, Coimbatore</th><th>Bharath Industries, Coimbatore</th></tr>
<tr><td>1.</td><td>பாதாள சாக்கடை திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெட் ராடிங் வாகனத்தின் (TN 61Q 3007) கம்பிரசர் மற்றும் ஜெட் எஞ்சின் போன்ற பகுதிகள் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>Rs.2,75,500/-</td><td>Rs.3,24,264/-</td><td>Rs.3,03,050/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்த Whale Enterprise Private Limited, Coimbatore என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td><u>அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
<tr>
<td>20.03.20</td>
<td>266</td>
<td>
<u>பொருள் எண்.06</u><br>
அரியலூர் நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டில் உள்ள குளீரூட்டும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்வதற்கு அன்று பெறப்பட்ட 13.03.2020 உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவறிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>JAYASIVAM A/C SERVICE CENTER, ARIYALUR</th><th>MM AIRCONS & HOME APPLIANCES, ARIYALUR</th><th>Murugan A/C SERVICE CENTER, ARIYALUR</th></tr>
<tr><td>1.</td><td>அரியலூர் நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டில் உள்ள குளீரூட்டும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>Rs.40,500/-</td><td>Rs.42,200/-</td><td>Rs,41,500/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JAYASIVAM A/C SERVICE CENTER, ARIYALUR என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td><u>அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

<table>
<tr>
<td>20.03.20</td>
<td>267</td>
<td>
<u>பொருள் எண்.07</u>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை தொகை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துதற்கு பொது மக்கள் அறியும் வண்ணம் ஈப்பு வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்காக ஒலிபெருக்கி, மைக் மற்றும் amplifiers கொள்முதல் செய்து அதனை வாகனத்தில் பொருத்துவதற்கு 13.03.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>GeeVee Systems, Ariyalur</th><th>Network Systems, Ariyalur</th><th>Newton System Sales and Services, Ariyalur</th></tr>
<tr><td>1.</td><td>சொத்துவரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை தொகை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துதற்கு பொது மக்கள் அறியும் வண்ணம் ஈப்பு வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்காக ஒலிபெருக்கி, மைக் மற்றும் amplifiers கொள்முதல் செய்து அதனை வாகனத்தில் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>Rs.24072/-</td><td>Rs.26,550/-</td><td>Rs.25,606/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த GeeVee Systems, Ariyalur என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td><u>அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
<tr>
<td>20.03.20</td>
<td>268</td>
<td>
<u>பொருள் எண்.08</u>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பெரியார் நகர் 5வது தெருவில் குடிநீர் பகிர்மான குழாயின் மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீருடன் சாக்கடை கழிவு நீர் கலந்து வருவதால், பொதுமக்கள் நலன் கருதியும் பழைய பகிர்மான குழாயினை அகற்றி புதிய பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு
<ol>
<li>குடிநீர் பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.</li>
</ol>
</td>
<td><u>அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
<tr>
<td>20.03.20</td>
<td>269</td>
<td>
<u>பொருள் எண்.09</u>
அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் நகராட்சி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வரை உள்ள 26.10 கி.மீ நீளத்திற்கு இடைவெளி நிரப்பும் திட்டம் 2018–19ன் கீழ் ரூ.1517.55 இலட்சத்திற்கு புதிய குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இந்நிலையில் மருதையாற்றில் குறுக்கே தெற்கு பகுதியில் குழாய் பதித்தால் மழை வெள்ள காலங்களில் மேற்படி குடிநீர்
</td>
<td><u>அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | குழாய் அடித்து செல்லப்பட நேரிடும். பொது மக்களின் குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு மருதையாற்றில் பதிக்கப்படும் குடிநீர் குழாயினை பாதுகாப்பு அரண் அமைத்து, பைல் பவுண்டேசன் செய்து அதற்கு மேல் கான்கிரிட் அமைப்பு ஏற்படுத்தினால் குடிநீர் வெள்ளத்தினால் அடித்து செல்லாமல் இருக்க தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | |
| **20.03.20** | **270** | **பொருள் எண்.10**<br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் நகராட்சி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வரை உள்ள 26.10 கி.மீ நீளத்திற்கு இடைவெளி நிரப்பும் திட்டம் 2018–19ன் கீழ் ரூ.1517.55 இலட்சத்திற்கு புதிய குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இந்நிலையில் மருதையாற்றில் வடக்கு பகுதியில் குழாய் பதித்தால் மழை வெள்ள காலங்களில் மேற்படி குடிநீர் குழாய் அடித்து செல்லப்பட நேரிடும். பொது மக்களின் குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு மருதையாற்றில் பதிக்கப்படும் குடிநீர் குழாயினை பாதுகாப்பு அரண் அமைத்து, பைல் பவுண்டேசன் செய்து அதற்கு மேல் கான்கிரிட் அமைப்பு ஏற்படுத்தினால் குடிநீர் வெள்ளத்தினால் அடித்து செல்லாமல் இருக்க தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு தொகை ரூ.8.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| **20.03.20** | **271** | **பொருள் எண்.11**<br>அரியலூர் நகராட்சியில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.1317/பி3/2016, நாள்.02.06.2016 தேதிய செயல்முறை உத்திரவின்படி, தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நகர்மன்ற தீர்மான எண்.98, நாள்.06.10.2016ன்படி Ourland Engineering works Pvt.Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருடவாரியாக மூன்று ஆண்டு ஒப்பந்தக்காலம் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 22.09.2019ம் தேதியோடு மேற்படி ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை அமர்த்திக் கொள்வதற்கு நிர்வாக அனுமதி கோரி கடந்த 06.08.2019 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | மேலனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.129, நாள்.31.10.2019ன்படி மேலும் ஆறுமாத காலத்திற்கு 22.09.2019 முதல் 22.03.2020 முடிய ஒப்பந்தம் காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 22.03.2020ம் தேதியுடன் ஒப்பந்த நிறுவனத்தின் காலநீட்டிப்பு முடிவுற உள்ளதால், மேலும், மூன்று மாத காலத்திற்கு பணியினை தொடர கால நீட்டிப்பு கோரி ஒப்பந்த நிறுவனம் எழுத்து பூர்வமான சம்மதம் தெரிவித்துள்ளார்.<br>இந்நிலையில், மேற்படி கோப்பு நடவடிக்கையில் உள்ளதாலும், உலகம் முழுவதும் பரவி அபாயம் ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதாலும், பொதுமக்களின் நலன் மற்றும் பொது சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து திறம்பட செயல்முறைப்படுத்திட ஏதுவாக, தற்சமயம் துப்புரவு பணியை மேற்கொண்டு வரும் Ourland Engineering works Pvt.Ltd, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் மேலும் மூன்று மாத காலத்திற்கு (23.03.2020 முதல் 22.06.2020 வரை) துப்புரவு பணியினை மேற்படி, நிறுவனத்தின் மூலம் தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் R.C.D2/3505/2019, நாள்.17.06.2019 நாளிட்ட புதிய தினக்கூலி அடிப்படையில் மேலும், மூன்று மாத காலத்திற்கு துப்புரவு பணியினை மேற்கொள்ளவும், அதற்கான தொகையினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி பெறலாம். மேலும் அதற்கான செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி, மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி அதற்கான தொகை வழங்கவும் அனுமதிக்கலாம். | |

**(ஒம்)திரு.என்.குமரன்,**
**தனி அலுவலர்,**
**அரியலூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையர்,**
**அரியலூர் நகராட்சி.**